8th July 1957]

Sri M. KANDASAMI PADAYACHI : மேட்டுப்பாங்கான இடங்களுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்ய ஓவர் டாங்கு கட்டி, குழாய் வெல்களை அமைத்துக் கொடுக்க சர்க்கார் உதவி செய்யுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : குடிதண்ணீர் வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால் தண்ணீர் வரக்கூடிய ஆழம் வெட்டினால்தான் அது நடைபெறும்.

Sri K. SATTANATHA KARAYALAR : இந்தத் திட்டத்திற்கு அஸ்திவாரக் கல்போட்டு இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. இனியாகிலும் காலதாமதம் செய்யாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நான் சொன்னதுபோல் எவ்வளவு சீக்கிரம் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

Protected water-supply scheme to Sirkali.

* 76 *Q*.—**Sri C. MUTHIAH PILLAI** : Will the Hon. the Minister for Revenue be pleased to state when the protected water-supply scheme for Sirkali Panchayat will be sanctioned?

The Hon. Sri M. A. MANICKAVELU : The protected water-supply scheme for Sirkali Panchayat will be taken up in its turn.

Sri C. MUTHIAH PILLAI : நான் அரசாங்கத்தில் விசாரித்ததில் இந்த திட்டத்தை 470-வது இட்டமாக பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் அப்பகுதியில் காலரா அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதை உடனடியாக கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த விஷயத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. முன்னேற்றமும் இருந்து வருகிறது. இருந்தாலும் சீர்காழி பஞ்சாயத் 48-வது "ராங்க்" -இல் இருப்பதால் சீக்கிரம் நடைபெறும்.

Protected water-supply to Courtallam.

* 77 *Q*.—**Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to supply protected water to Courtallam ; and

(*b*) if so, the details of the scheme and when it will be taken up for execution?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) A composite water-supply scheme for Tenkasi, Courtallam, Melagram and Ilanji Panchayats in the Tirunelveli district which contemplates the supply of water at the rate of 15 gallons *per capita*, has been sanctioned. The proportionate capital cost and the maintenance charge for the Courtallam Panchayat towards the scheme are Rs. 2·08 lakhs and Rs. 2,770 per annum respectively. The preparation of detailed plans and estimates for the scheme is in progress.